Cambridge O Level

**Cambridge Assessment International Education**
Cambridge Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **October/November 2019**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*6230145674*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.


© UCLES 2019
Cambridge Assessment International Education

**BLANK PAGE**

© UCLES 2019

## Section A – Translation

**1** Translate into **English**.

பள்ளி மணி அடித்தது, வாணன் வேகமாகத் தன் பையைத் தோளில் மாட்டிக்கொண்டு வெளியே சென்றான். அவன் நாள்தோறும் பள்ளி முடிந்தவுடன் தன் தந்தையின் கடைக்கு விரைந்து செல்வான். தந்தை முப்பது ஆண்டுகளாக மீன் விற்கும் வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு உதவியாக யாரும் இல்லை. வாணன் தந்தைக்கு ஒரே மகன். அவன் நல்ல ஒழுக்கம் உடையவன். அதனால், நாள்தோறும் தந்தைக்கு வியாபாரத்தில் கை கொடுப்பான். இவ்வாறு வியாபாரம் சீரும் சிறப்புமாக நடந்தது. தந்தைக்கு ஒரே மகிழ்ச்சி. தொடக்கத்தில் அவர் வாடகை வீட்டில் வசித்து வந்தார். ஆனால் போகப் போக ஒரு நிலத்தை வாங்கி, பெரிய மாடி வீடு ஒன்றைக் கட்டினார். வாணனின் சிறு குடும்பம் அமைதியாகவும் இன்பமாகவும் வாழ்ந்தது.

[10]

**2** Translate into **Tamil**.

Two friends decided to go for a walk in the forest. On the way, they met a woodcutter. He was cutting down a tree. He was wearing torn clothes. One of the friends approached him and asked, "Sir, why are you cutting down that tree? Did it cause you any harm?" Surprised, the woodcutter dropped his axe and replied sadly, "Oh child! I am a poor man. I have a family to look after. I am doing my job to earn some money." The boys thought for a while and then said, "We understand that you have to look after your family, but when you have finished cutting down the tree we will help you to plant more trees."

[20]

## Section B – Reading Comprehension

Do **not** translate the passage below. First read it carefully and then answer, briefly and in **Tamil**, the questions that follow.

ஓர் ஊரில் ஒரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவனிடம் நிறைய பணம் இருந்தது. அவன் பல ஆண்டுகள் கடினமாக உழைத்தான். ஒரு தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்தி வந்தான். அவனிடம் ஒரு பெரிய பண்ணையும் இருந்தது. அவனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவன் ஒரு நாள் தன் இரு பிள்ளைகளையும் அழைத்துச் சொன்னான். "பிள்ளைகளே! நான் இன்னும் சிறிது காலம் தான் உயிர் வாழ்வேன். எனக்கு வயதாகி விட்டது. உடல் வலிமை குறைந்து விட்டது. <u>உடல் நலம்</u> கெட்டுவிட்டது. நான் படுத்தபடுக்கையாய் கிடக்கிறேன். நான் என்னுடைய செல்வத்தை உங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க விரும்புகிறேன். இதை அவன் <u>மெல்லிய குரலில்</u> சொன்னான்." தந்தையின் இந்த நிலையைக் கண்ட இரு பிள்ளைகளும் கண்ணீர் வடித்தார்கள்.

வணிகன் தொடர்ந்து பேசினான். "உங்களில் யார், என் மீது அதிக அன்பு வைத்திருக்கிறீர்களோ அவனுக்கு என் செல்வத்தை எல்லாம் அளிப்பேன்." என்றான். இதைக் கேட்ட மூத்த மகன், "அப்பா, உங்கள் மீது தம்பியைவிட எனக்குத்தான் மிகுந்த அன்பு உண்டு" என்றான். வணிகனும் அவன் சொன்னதை அப்படியே நம்பிவிட்டான். ஆனால் இளைய மகன் வாய்விட்டு எதுவும் பேசவில்லை. அவன் <u>எப்போதும்</u> தந்தையின் பேச்சைக் கேட்டு வந்தான். அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். தந்தையிடம் மிகவும் அன்பாக இருந்தான். மூத்த மகன் அவன் நண்பர்களோடு ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தான். மூத்த மகன் சுயநலக்காரனாக இருந்தான். குடும்பத்துடன் மிகக் குறைந்த நேரமே தங்கினான்.

ஆனால் மூத்த மகனின் சொற்களை நம்பி அவனுக்கே எல்லாச் செல்வத்தையும் அளிப்பதாகச் சொன்னான். மூத்த மகனோ இதைக் கேட்டும் அவன் ஒழுக்கத்தைச் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை. தந்தையின் நலத்தில் சிறிதும் அக்கறையும் காட்டவில்லை. இதைக் கண்ட வணிகன் <u>உள்ளம் வருந்தியது</u>. தான் செய்த தவறை உணர்ந்து அழத் தொடங்கினான்.

ஒரு நாள் காலையில் இளைய மகன் <u>வழக்கம்போல்</u> தன் தந்தையைக் கவனிக்கப் போனான். அப்போது அவர் அவனிடம் சொன்னார்: "உனக்கு நான் என் செல்வத்தில் பாதியைக் கொடுக்க விரும்புகிறேன். நான் செய்த தவற்றை இப்போது உணர்ந்து விட்டேன்." இதைக் கேட்டதும் இளைய மகன் மிகவும் சந்தோஷப்பட்டான்.

© UCLES 2019

Now answer the following questions **briefly**, using your own words as far as possible.

**3** வணிகனிடம் எவ்வாறு நிறைய செல்வம் இருந்தது? [4]

**4** தன்னுடைய மகன்களுக்கு செல்வத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று வணிகன் ஏன் எண்ணினான்? (4 காரணங்களை எழுதுக.) [4]

**5** வணிகன் ஏன் மூத்த மகனுக்கு எல்லாச் செல்வத்தையும் அளிப்பதாகச் சொன்னான்? [2]

**6** இளைய மகன் எத்தகைய ஒழுக்கம் உடையவன்? [3]

**7** மூத்த மகன் பற்றி இரண்டாவது பத்தியிலிருந்து நாம் அறிவது என்ன? [2]

**8** வணிகன் ஏன் அழத் தொடங்கினான்? [2]

**9** முடிவில் அந்த வணிகன் இளைய மகனிடம் என்ன சொன்னான்? [2]

**10** ழ்வரும் சொற்களுள் எவையேனும் மூன்றை விளக்குக. [6]

**(i)** உடல் நலம்

**(ii)** மெல்லிய குரலில்

**(iii)** எப்போதும்

**(iv)** உள்ளம் வருந்தியது

**(v)** வழக்கம்போல்

[Total: 25]

© UCLES 2019 

**BLANK PAGE**

© UCLES 2019

**BLANK PAGE**

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.